
சிவகாமி
பா.சாந்தகுமார்


சிவகாமி




பா.சாந்தகுமார்

# சிவகாமி

பா.சாந்தகுமார்

# சிவகாமி

**Created by**
Shanthakumar

**Script**
Shanthakumar

**Art**
Mohan Art

**Color**
Alex

**Letters**
Gopi

**Cover Art**
Mohan Art

**Assistant Editor**
Subash

**Editor**
Jeyan

Organiser
Prakash ambedkar

8B STUDIO



SIVAGAMI 1092 C.E . ISSUE ONE, published by Author.,
SIVAGAMI 1092 C.E. © 2020 ™ All Rights Reserved.
The characters included in this book and the distinctive likenesses there of are properties of Author and Publisher.
All names, characters, events, and locales in this publication are entirely fictional. Any resemblance to actual persons (living or dead), events or places, without satiric intent, is coincidental.
No portion of this book may be reproduced by any means (digital or print) without the written permission of author/ Publisher, except for review purposes.
The scanning, uploading and distribution of this book via the internet or via any other means without the permission of the publisher is illegal and punishable by law. please purchase only authorized electronic editions, and do not participate in or encourage piracy of copyrighted materials. for press, licensing, media, or other activities please contact msg2shanth@gmail.com

## சமர்ப்பணம்

நமது தாயக தாரமாக புதல்வியாக வாழும்
அனைத்து சிவகாமிகளுக்கும்....

**புத்தகம் மற்றும் பதிப்பகத்தின் விவரங்கள்**

முதல் பதிப்பு : ஜனவரி 2020
அளவு : 216mm X 138mm
பக்கங்கள்: 136
விலை ரூ.

**மேலும் விவரங்களுக்கு அணுகவும்**

**பதிப்பாளர்:**

சாந்தகுமார் பார்த்தசாரதி

**முகவரி:**

எண் : 93/114, சண்முகானந்தா கோவில் தெரு,
மாங்காடு , சென்னை - 600122
7299556446
msg2shanth@gmail.com

# சிவகாமி

சிவகாமி இஃது ஒரு வரலாற்றுப் புனைவு கதை. வீரம் நிறைந்த அரசர்கள் அரசாங்கங்களும் ஆண்ட மண்ணின் கதை.

பல குறுநில மன்னர்கள் மற்றும் பேரரசுகள் காலம் காலமாக ஆண்டு வந்த மண்ணில் அந்த அரசுகளுக்கிடையிலான பகை, துரோகம், கைமாறு, வர்த்தகம், போர் மற்றும் உறவின் நிலைக் குறித்த ஒரு கற்பனைக் கதையே இந்த சிவகாமி.

நம் அனைவரையும் கவர்ந்த ஒரு கதாபாத்திரத்தின் தாக்கத்தால் வெளிவந்துள்ளது இந்த ஒளிப்படக் கதை. சிவகாமி என்ற முதன்மை கதாபாத்திரம் ஒரு பெண்ணாகவும் ஓர் அரசியாகவும் தன் ராஜ்ஜியத்தையும் மக்களையும் காக்கப் போராடுவதை அழகிய ஓவியங்களுடன் சித்திரக்கதை வடிவில் நேர்த்தியாகப் படைக்கப்பட்டுள்ளது. டிஜிட்டல் வடிவில் வரையப்பட்ட இந்த ஓவியங்கள் கதையோடு ஒன்ற வைத்து அந்த உலகிற்கே கூட்டிச் செல்லும் என்பது திண்ணம்.



பா.சாந்தகுமார்


பார் போற்றும் எழில்மதி பேரரசும் அதைச்சுற்றி இந்திரயுதா,
வாமனகிரி என்ற சிற்றரசுகளும் இருந்தன.



ஆ ஆ ஆ,,,,,,,,
இந்திரயுதா மன்னர் மாதேஸ்வர எல்லாளர்
எதிரிப்படைகளை வென்று மகிழ்ச்சி இல்லாமல் அரண்மனை திரும்பினார்
மன்னர்
வாழ்க... வாழ்க...


பல ஏக்கங்களுடன் தன் இரு மகள்கள் விளையாடிக்
கொண்டிருப்பதை மன்னர் பார்க்க, அதை அமைச்சர் பார்த்தார்
பௌர்ணமி அன்று சிவபூஜை
செய். உன் ஏக்கங்கள் தீரும்
அதனால் மன்னரை ராஜகுருவிடம் அழைத்துச்சென்றார்


குருக்களின் அறிவுரைப்படி பௌர்ணமி அன்று
சிவ பூஜை நடந்தது

பூஜை முடிந்து அரண்மனை திரும்பிக் கொண்டிருந்தார்கள்,
அப்போது கள்வர் படை தாக்க முற்பட்டது
அதோ அவர்கள் வருகிறார்கள்



கள்வர்களால் இந்திரயுதா படைவீரர்கள் ஒன்றன்பின் ஒன்றாக கொல்லப்படுகிறார்கள்
இறுதியில் மன்னரும் கீழே விழுந்தார் அவரை கொல்ல முற்படுகிறார்கள்
ஆ ஆ ஆ,,,,, வேண்டாம்
அப்போது


சற்றும் எதிர்பாராத விதமாக கள்வன் குத்தப்பட்டு சாய்கிறான்
ஆ ஆ ஆ,,,,,
என்னவென்று அறிவதற்குள் அனைவரும் ஒரு சிறுமியால் கொல்லப்படுகிறார்கள்
6


ஆ ஆ ஆ,,,,,
ஆம் அவர்களை கொன்றது மன்னரின் மூத்த மகளாகிய சிவகாமிதான்
ரத்தத்தினால் அவளின் ஆடையும் கோபத்தினால் அவளது கண்களும் சிவந்தன
7


அதை பார்த்த மன்னர் மாமகிழ்ச்சி அடைந்து அவசர அவசரமாக அமைச்சரவையை கூட்டினார்
“இந்த தேசத்திற்கு வருங்கால மன்னரை ஈசன் காட்டிவிட்டார்”
என்று கூறி தன் மகள் சிவகாமியை திரும்பி பார்த்தார்


எந்நிலை வந்தாலும் தர்மம் தவறாதே!
அன்று முதல் சிவகாமி கல்வி, அறிவியல், வீரம், உட்பட அனைத்திலும் புலமை பெற்று வளர தொடங்கினாள்
9


சிவகாமி குருபூஜை முடிந்து விரைவில் தேசம் திரும்புவாள்
பல வருடங்களுக்கு பிறகு அமைச்சரும் மன்னரும்,சிவகாமியை பற்றி பேசிக் கொண்டிருந்தனர்
மறுபுறம் கள்வர் கூட்டம் பெண்கள் குளிக்கும் குளத்தை கொள்ளையடிக்க நோட்டமிட்டிருந்தார்கள்


சட்டென்று படைவீரர்களை கொன்றுவிட்டு பெண்களை பிடிக்க துரத்தினார்கள்
அப்போது ஒரு பெண் தடுமாறி கரையிலிருந்த ஆயுதங்களின் மேல் விழ, ஆயுதங்கள் குளத்தில் விழுந்தன


ஒரு கொள்ளையன் பெண்ணின் சேலையை பிடிக்க முற்பட்டபோது
சட்டென்று நீரிலிருந்து வெளியே வந்த ஒரு அம்பு...
கொள்ளையனின் கையை கிழிக்க அவன் திரும்பி பார்க்கிறான்
ஏய்,,,,,,,,
12


நீரிலிருந்து கையில் வில்லுடன் வீறுகொண்டு எழுந்தாள் சிவகாமி


கணநேரத்தில் அனைத்து கொள்ளையர்களையும் சண்டையிட்டு
கொன்றாள். மற்றவர்கள் பின்வாங்கி ஓடி விட்டார்கள்.
ஏய் .... ய்ய்ய்
ஆஆ...... ஆஆ


என்றும் நலமுடன் இருப்பாயாக
தியானம் முடித்து தன் ஆசானான
வரதாச்சாரியாரிடம் ஆசிபெற்று தன் தேசம் திரும்பினார்
15


இந்திர தேசம் திரும்பிய சிவகாமியை அவளின் தாய் வரவேற்க, தந்தையிடம் ஆசி பெற்றாள்
மறுநாள் பயிற்சிக் களத்தில் அவளின் தோழியிடம் பேசிக்கொண்டிருந்தாள்
பக்கத்து தேசமான வாமன கிரியில்
ஆயுதப் போட்டி நடைபெற இருக்கிறது


அதன்படி சிவகாமியும் அவள் தோழியும் போட்டியில் பங்கேற்றார்கள்
ஒருபுறம் நேரம் முடிந்து கொண்டிருக்க மறுபுறம் மக்கள் ஆரவாரத்துடன் ஆர்ப்பரிக்க அனைத்துப் போட்டியாளர்களும் திரும்பிப் பார்த்தார்கள்


இறுதி போட்டியாளராக, இடி முழக்கத்துடன் குதிரை கால்பதிக்க, மின்னல் வெடிக்கும் பார்வையுடன் கம்பீரமாக நுழைந்தார் இளவரசர் விக்ரம தர்மன்



இறுதி போட்டிக்கு நுழைய விக்ரமரும், சிவகாமியும் மற்றொரு வீரரும் தங்களது திறமையை காட்டிக் கொண்டிருந்தார்கள்
அதில் விக்ரமனும், சிவகாமியும் வென்று இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்கள்


மூன்று அம்பு மூன்று இலக்கு என்ற இறுதிப்போட்டியில் விக்ரமன் ஒரு இலக்கைச் சற்று தள்ளியும் மற்ற இரு இலக்குகளை துல்லியமாகவும் எய்தான்
20


முதல் இலக்கை சிவகாமி தகர்க்க முற்பட்டபோது காற்றின் வேகம் காரணமாக இலக்கை தகர்க்க முடியவில்லை
அப்போது சிந்தித்த சிவகாமி காற்றின் வேகத்திற்கு ஏற்ப இரண்டாவது அம்பினை எய்து,மூன்றாவது அம்பினால் அதனை இரண்டு துண்டுகளாக பிளந்து மூன்று இலக்கையும் சரியாக தகர்த்தாள்


மூன்று இலக்கும் சரியாக தகர்க்கப்பட்டதால் சிவகாமி வெற்றிப்பெற்றாள்
இளவரசர் விக்ரமன் தனது தங்கமணி மாலையை அவளுக்கு பரிசாக அளித்தார்
22


போட்டியை முடித்து விட்டு தனது தேசம் திரும்பும் வழியில் தன்தேச மக்கள் அடிப்படை வசதியின்றி தவிப்பதை பார்த்தாள்


அதைப்பற்றி தனது அமைச்சரவையில் மன்னரிடமும் அமைச்சர்களிடமும் விசாரித்தாள்
ஏன் இந்த நிலைமை?
போதிய நிதி இல்லை. நிதி நெருக்கடி, என்ன செய்வது?


அவள் தனது தேசத்தின் நிலையை எண்ணி வருத்தப்பட்டுக்கொண்டிருந்தபோது
அவள் வழியில் பார்த்த மேலைநாட்டு வணிகர்களை பற்றி நினைவுக்கு வந்தது
அதன்படி அவர்களுடன் உலோக உற்பத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது
இந்திர தேசத்து உலோகங்கள் என்றும் விலைமதிப்பற்றது
அதை உங்களுடன் பகிர்வதில் மகிழ்ச்சி
25


அதன்படி உலோக உற்பத்தி செய்யப்பட்டு ஆயுதங்களும் மற்ற ஆபரணங்களும் கப்பல்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டது


இளவரசர்களை அழைத்து வாருங்கள்
எழில்மதி பேரரசர் விஜயேந்திரர் நோயுற்று கிடக்க அரசியும் ராஜாமாதாவுமான சந்திரமதி மற்றவர்களை அழைத்தார்
மக்களுக்கு தேவையான பாதுகாப்பு இருப்பிடங்களை மக்களோடு ஒருவராக இளவரசர் மகேந்திரதேவா கட்டிக்கொண்டிருந்தார்


மற்றொருபுறம் மூத்த இளவரசர் மங்களதேவா அந்தப்புரத்தில் உல்லாசமாக இருந்தார்
அரசே பேரரசி தங்களை அழைக்கிறார்


தந்தைக்கு பதிலாக
முடிசூட்டு
விழாவிற்கு செல்.
அரசி சந்திரமதி இளவரசர் மகேந்திரனை முடிசூட்டு விழாவிற்கு சென்று மரியாதையை ஏற்றுக்கொள்ள சொல்கிறார்
அதன்படி இளவரசன் மகேந்திரனும் செல்ல முடிவெடுக்கிறார்


இளவரசன் விக்ரமன் சிறுமிகள் வாள் சண்டை விளையாடுவதை பார்த்து சிவகாமியை நினைவு கொள்கிறான்
அவளைப் பற்றி படை வீரர்களிடம் விசாரிக்க சொல்...
30


முடிசூட்டு விழாவில் அனைத்து தேசத்து அரச பெருமக்களும் பங்கேற்றார்கள்.
அப்போது இளவரசி சிவகாமி வருவதை பார்த்த விக்ரமதர்மன்
அவள் இளவரசி என உணர்ந்து கொள்கிறான்
முடிசூட்டு விழாவில் மாமன்னருக்கு மகுடம் அணிவிக்க கொண்டுவரப்படுகிறது


சலசலப்பான கூட்டத்தில் சட்டென்று அமைதி, திரும்பிப் பார்க்கையில்
இளவரசர் மகேந்திரன் ஆரவாரமில்லாமல் நுழைகிறார்.
32



நியாயமாக தனக்கு வழங்கவேண்டிய மணி மகுடத்தை இருப்பதிலேயே மூத்தவரான மன்னர் மாதேஸ்வரருக்கு சூட்ட சொல்கிறார்
எப்போதும் நீதி தர்மத்தை நிலைநாட்டும் மாதேஸ்வர மன்னரே இதற்கு தகுதியானவர்
அதன்படி மாதேஸ்வரருக்கு மணிமகுடம் சூட்டப்படுகிறது


அப்போது மன்னர் மாதேஸ்வரரின் இளைய இளவரசி லட்சுமி தேவியும், இளவரசர் மகேந்திரனும் கண்ணோடு கண் பார்க்கிறார்கள்
பார்வையிலேயே நன்றி கூறினார் இளவரசி


வாமனகிரி மாமன்னர் வரகுணவர்மரும், அவரது ஐந்து மகன்களும்
வாமனகிரியை ஆண்டு வந்தார்கள்


அதில் மூத்த மகனாகிய விஷ்ணுவர்தன் வணிகத்துறையும், இளைய மகன்களாகிய
விக்ரம தர்மன் மற்றும் விகந்தன் மற்ற துறைகளையும் கவனித்து வந்தார்கள்


இளவரசர் வருகையை ஒட்டி வாமன கிரியில் மன்னர் வரகுணர் தலைமையில் விருந்தளிக்கப்பட்டது
அப்போது புதிய நாணயத்தை மன்னர் வெளியிட்டார்


வணிக கணக்குகளை மன்னரிடம் ஒப்படைத்துவிட்டு தனது ஆட்சிக்குட்பட்ட மரக்காணப்பட்டினத்திற்கு செல்ல தொடங்கினார் விஷ்ணுவர்தன்
தனது தாயிடம் ஆசி பெற்றுப் புறப்பட்டார்.
அதன்படி நீண்ட நாள் பயணத்திற்குப்பிறகு மரக்காண துறைமுக பகுதிக்கு சென்றார்
37


கொள்ளைக் கூட்டத்தின் தலைவன் கார்முகிலன் வழிநடத்த, கொள்ளையடித்த
செல்வங்களுடன் தனது மறைவிடம் திரும்பினார்கள் கோள்கொள்ளையர்கள்
கொள்ளையர்கள் மகிழ்ச்சியில்
நடனமாடி மகிழ்ந்தார்கள்
தலைவன் கார்முகிலன், தனது
மகன் செந்நீதி மாறனுக்கு அறிவுரை வழங்கினார்


மறுநாள் கொள்ளையடித்த பொருட்களை வணிகரிடம் கார்முகிலன் விலைபேசி கொண்டிருந்தான்
பழமையான விலை உயர்ந்த நகைகளை வணிகன் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது..


இது விலைஉயர்ந்த ஆபரணம்
மன்னர்களிடமும் பெரிய
செல்வந்தர்களிடமும் மட்டும் தான் இருக்கும்.
அதைப்பற்றி கார்முகிலனிடம் கேட்கும்போது பழைய நினைவுகளை நினைவு சூர்ந்தான்


ஆதி நல்லூர் கொள்ளை போனதைப் பற்றி அதன் மன்னரும், இளவரசரும், உரையாடிக் கொண்டிருந்தார்கள்
அதன் இறுதியில் உதவிக்கு பக்கத்து தேசமான எழில்மதியை நாடலாம் என முடிவெடுத்தார்கள்
அவர்கள் நமக்கு உதவுவார்கள்
41


பக்கத்து தேசத்தில் கொள்ளை போயிருக்கிறது என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?
கொள்ளை சம்பவத்தை அறிந்த வரகுண வர்மன் தனது படைத் தளபதியை கண்டித்தார்
அதனால் துவண்டுபோன தளபதிக்கு இளவரசன் விக்ரமன் ஆறுதல் கூறி பாதுகாப்பு படையை அதிகரித்தார்


ஆசான் வரதாச்சாரியார் வந்திருப்பதை காவலர் மூலம் அறிகிறான் விக்ரமன்
அதன்படி அவரை பார்க்க விரைந்து செல்கிறான்
வணக்கம் குருவே.. நலமுடன் வாழ்வாயாக!
43


விக்ரமனும் குருவும் உரையாடி கொண்டிருக்க மற்றொரு மாணவரைப் பற்றி கூறுகிறார் குரு வரதாச்சாரியார்
உன்னை போல் மற்றொரு சிறந்த மாணவரை காட்டுகிறேன்
அவர் காட்டிய பக்கம் திரும்ப
44


கையில் பூக்களுடன் முகத்தில் புன்னகையுடன் வந்தாள் சிவகாமி
நீங்கள் இருவருமே ஆகச்சிறந்த மாணவர்கள்


ஆண்டின் கணக்கு வழக்குகளை இந்திரயுத அமைச்சரவை மன்னரிடமும், சிவகாமியிடமும் விவரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது பக்கத்து குறுநில தேசமான ஆதி நல்லூர் மக்களுக்கு உதவலாம் என்று முடிவெடுக்கிறார்கள்
அதன்படி உணவுகளையும், பொருட்களையும் இளைய இளவரசி லட்சுமி தேவி தலைமையில் ஆதி நல்லூருக்கு கொண்டு செல்கிறார்கள்
46


லட்சுமிதேவி ஆதிநல்லூர் மன்னரை பார்க்கும்போது எழில்மதி இளவரசர் மகேந்திரன் ஏற்கனவே உதவி கொண்டு இருப்பதை அறிகிறாள்
மீண்டும் இளவரசர் மகேந்திரனும், லட்சுமி தேவியும் கண்ணோடு கண் பார்த்து மெய்மறந்து நின்று கொண்டிருந்தார்கள்
47


வயது ஏறிக்கொண்டே போகிறது எப்போது தான் திருமணம் செய்து கொள்வாய்
தனது மகன் விக்ரமனுக்கு திருமணம் செய்ய தாய்கள் முற்படுகிறார்கள்
எனக்கு ஒரு பெண்ணைப் பிடித்திருக்கிறது அவள் விருப்பத்தை கேட்டுவிட்டு உங்களிடம் சொல்கிறேன்
அதன்படி சிவகாமியை பார்க்க விரைந்தான் விக்ரமன்


கோயிலில் சிவகாமி இருப்பதை பார்த்த விக்ரமன் அவளிடம் தனியாக பேச விழைகிறான்
எனக்கு உன்னை திருமணம் செய்து கொள்ள ஆசை, உனக்கு அப்படி ?...
எனக்கு உங்களை நல்ல மனிதராக பிடிக்கும் ஆனால் திருமணம்?,,
சரி பரவாயில்லை, நல்ல நண்பர்களாகவே இருப்போம் தங்களுக்கு எப்போது உதவி தேவைப்பட்டாலும் என்னை அழையுங்கள் என்று கூறி விடை பெறுகிறான்


நீண்ட நாள் ஆகியும் மறைவிடம் திரும்பாத தனது கூட்டத்தின் கொள்ளையர்களை பற்றி செந்நீதிமாறனுடன் விவாதித்து கொண்டிருந்தார் கார்முகிலன்
எங்கேடா சென்று தொலைந்தீர்கள்?
அப்போது அந்த கொள்ளையர்கள் வருவதை பார்த்த கார்முகிலன் சற்றே கோபமாக அவர்களிடம் கேட்டான்
50


கொள்ளையடித்தால் விரைவாக வர வேண்டும் என தெரியாதா?
இல்லை தலைவரே கண்ணுங்கோள் வைத்து கொள்ளையடிப்பதற்கு நீண்ட நாள் ஆகி விட்டது
அப்போது கொள்ளையடித்த பொருட்களை கார்முகிலனிடம் காட்டுகிறார்கள்
51


என்ன தந்தையே, என்ன சிந்திக்கிறீர்கள்?
அப்போது அதைப் பார்த்த கார்முகிலன் மீண்டும் பழைய நினைவுகளை நினைவு கொண்டு கொள்ளையடித்த அந்த இடத்தைப் பற்றி கேட்கிறான்
52


அதே இரவில் அந்த இடத்தை நோக்கி பயணிக்கிறான் கார்முகிலன்
எப்படி உள்ளே நுழைவது?
அந்த அரண்மனையை அடைந்ததும் மறைவாக நின்று நோட்டமிடுகிறான்


யாருக்கும் தெரியாமல் மறைவாக உள்ளே சென்று மன்னர் தங்கும் அறையை எட்டி பார்க்கிறான்
இவர் ???
அப்போது முதியவர் ஒருவர் உறங்கிக் கொண்டிருப்பதை பார்க்கிறான்
54


கார்முகிலன் அந்த முதியவரிடம் பேச தொடங்குகிறான்
நீ..? முகிலன் தானே..
அப்போது அவன் கொண்டுவந்த அந்த பழைய மதிப்புமிக்க அணிகலனை அவரிடம் காட்டி அதைப் பற்றி கேட்கிறான்
இது உன்னிடமா உள்ளது ,இதை வைத்திருப்பவன்???
அந்த நகையை பற்றியும் அதன் பழைய நிகழ்வை பற்றியும் கார்முகிலனிடம் ரகசியமாக கூறுகிறார் அந்த மூத்த அமைச்சர்.


அதைக் கேட்டதும் கார்முகிலன் கண்களில் கண்ணீர் சிந்த, விரைவாக அந்த அரண்மனையை விட்டு வெளியேற முற்படுகிறான்.
அப்போது காவலர்கள் அவனை பார்த்து...


அபாய ஒலி எழுப்புகிறார்கள்.. அதை தூரத்திலிருந்த வாமன கிரி படைத்தளபதி கேட்டு அரண்மனையை படைவீரர்களுடன் நெருங்கினான்
அவர்கள் ஆயுதங்களுடன் நெருங்கி விட்டார்கள்.
கார்முகிலன் அவர்களிடமிருந்து தப்பி ஓடுகிறான்
57


அப்போது தளபதி எய்த அம்பு இவன் முதுகில் பாய வீரிய வலியுடன் தன் குதிரையின் மீது சாய்கிறான்
ஆஆஆஆ


சற்று தூரம் சென்றதும் நிலை தடுமாறி மயங்கிவிழ அவனது குதிரை மறைவிடம் நோக்கி சென்றது


படைவீரர்கள் கார்முகிலனை தேடிக் கொண்டிருப்பதை தூரத்திலிருந்து ஒருவன் பார்க்கிறான்
தன் தந்தையின் குதிரையின் சத்தம் கேட்டு செந்நீதி மாறன் பார்க்கிறான்
குதிரை கனைக்கிறது
வேகமாக செல்
குதிரை வந்த பாதையை நோக்கி செந்நீதிமாறன் தனது படையுடன் விரைகிறான்


தனது தந்தை அம்பு எழுதி மயங்கி விழுந்ததை பார்த்து அவரை மருத்துவரிடம் தூக்கி செல்கிறான்.
அவர் ஏற்கனவே இறந்து விட்டார்
ஏதாவது செய்து காப்பாற்றுங்கள்
தந்தை இறந்ததை மருத்துவ தெரிவிக்க கோபப்படுகிறான்


தனது தந்தையின் உடலுக்கு தீயிட்டு, உன் இறப்பிற்கு
காரணமானவர்களை பழிவாங்குவேன் என சபதம் எடுக்கிறான்.


இந்திரயுதா கப்பல் பழுதாகியதால், தனது தேசத்திற்கு வணிகப் பொருட்களைக் கொண்டு வருவதற்கு கப்பல்கள் வேண்டி விக்ரமனிடம் உதவி கேட்கிறாள் சிவகாமி
அதன்படி தனது அண்ணன் விஷ்ணுவர்தனுக்கு உதவி செய்ய செய்தி அனுப்புகிறான் விக்ரமன்.
63


இந்திர தேசத்திற்கு வணிக உதவி தேவை. கப்பலை அனுப்பி வை. இப்படிக்கு, விக்ரமன்


அந்த செய்தியறிந்த விஷ்ணுவர்தன் கப்பல்களை மேலை நாடுகளுக்கு அனுப்பினான்


நமது தேச மக்கள் மகிழ்ச்சியே முக்கியம். திருமணத்தைப் பற்றி பிறகு பார்க்கலாம்
நாடு வளர்ச்சி அடைந்ததை ஒட்டி மன்னர் மாதேஸ்வரர் சிவகாமி திருமணத்தை பற்றி பேச தொடங்குகிறார்
பொதுமக்களை பார்க்க மன்னரும் சிவகாமியும் உலா சென்றார்கள்
நலமாக உள்ளீர்களா?
ஆம் தாயே
சிவகாமி ஒரு குழந்தையை தூக்கி வைத்துக்கொண்டு இருப்பதை பார்த்து மன்னர் ஆனந்தப்பட்டார்


பார்த்தாயா மக்கள் மகிழ்ச்சியாக தான் உள்ளார்கள் நீ திருமணம் செய்து கொண்டால் மேலும் மகிழ்ச்சி அடைவார்கள்
நாடு வளர்ச்சி அடைந்ததை ஒட்டி மன்னர் மாதேஸ்வரர் சிவகாமி திருமணத்தை பற்றி பேச தொடங்குகிறார்
நேரம் வரும் போது நானே சொல்கிறேன் தந்தையே
அந்த நேரம் விரைவாக வரும் என நம்புகிறேன்


தனது நாட்டிற்க்கு வணிகப் பொருட்கள் வந்தடைந்த செய்தியை காவலர் மூலமாக அறிகிறாள் சிவகாமி.
அனைத்து பொருட்களும் வந்துவிட்டன. அதன்படி விக்ரமனுக்கு நன்றி கூற அவனை பார்க்க செல்கிறார்.
67


நன்றி எதுவும் தேவை
இல்லை, இது எங்கள் கடமை.
வணிகப் பொருட்கள் வந்தடைந்ததை ஒட்டி மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவிக்கிறாள்
ஒரு நிமிடம் நில் என்றான் விக்ரமன்


அப்போதுதான் அவன் அவளை சரியாக கவனித்து பார்க்கிறான், அவள் அணிந்திருந்த மாலையை
பார்வையிலேயே சம்மதமா என்று கேட்கிறான் விக்ரமன், அதற்கு அவள்,,,,,
சம்மதம்


வரகுண வர்மன் தனது மனைவியுடன் இறந்த அமைச்சரின் இறுதி சடங்கிற்கு சென்று கொண்டிருந்தார்
பார்த்து விரைவாக செல்லுங்கள்
அவர்களை தாக்க கோள் கொள்ளையர்களின் கூட்டம் மறைந்திருந்தது


உனது சாவிற்கு நீயே காரணம் தேடிக் கொண்டாய்
மளமளவென கோள் கொள்ளையர்கள் கூட்டம் மன்னர் படையினை தாக்கி மன்னரை கொல்ல முயற்சித்தன
மன்னரை கட்டிவைத்து கொள்ளையன் ஒருவன் அம்பு எய்கிறான்
தூரத்திலிருந்து வந்த கத்தி அந்த அம்பின் திசையை மாற்றியது
71


ஐயோ,,,,,,,,
அந்த அம்பு ஒரு கொள்ளையனையும், கத்தி மற்றொருவனையும் கொல்ல சற்றென்று வந்து அவர்களிடமிருந்த ஆயுதம் மூலமாகவே மற்றவரையும் கொன்றாள் சிவகாமி
72


வேகவேகமாக அனைத்து கொள்ளையர்களிடமும் சண்டையிட்டு ஒவ்வொருவரையும் சாய்த்தாள்


சண்டையில் அவள் கையில் காயம் ஏற்பட்டு தடுமாறினாள். அப்போது ஒரு அம்பு கொள்ளையனை சாய்த்தது.


தூரத்திலிருந்து கையில் வில்லுடன் குதிரையில் வந்தான் விக்ரமன்
இவர் தான் எங்களைக் காப்பாற்றினார்
மன்னர், சிவகாமியை விக்ரமனுக்கு அறிமுகம் செய்து வைத்தார்


இந்த ஆண்டு வரவை விட செலவு அதிகமாக உள்ளது ஏன் ?
எழில்மதியில் ஆண்டு வணிக கணக்கை அரசி சந்திரமதி அமைச்சர்களுடன் விவாதித்து கொண்டிருக்கிறார்
ஆயுத உற்பத்தி மிகவும் மோசமடைந்து விட்டது
அப்போது பெரும்பாலான எழில்மதி உலோக உற்பத்தி வணிகம் இந்திரயுத தேசத்திற்கு சென்றுவிட்டதாக நிதியமைச்சர் தெரிவிக்கிறார்
76


மன்னர் வரகுண வர்மரும் மகாராணிகளும் அரசு பொறுப்புகளை தற்காலிகமாக
விக்ரமனிடமும் விகந்தனிடமும் ஒப்படைத்துவிட்டு மரக்காணப்பட்டிணம் சென்றார்கள்


எங்கள் தேசத்தின் பாதுகாப்பு நிலை மிகவும் மோசமாக
உள்ளது நீங்கள் உதவ வேண்டும்
ஆதி நல்லூர் மன்னரும் இளவரசரும் உதவிகேட்டு அரசி சந்திரமதியை நாடுகிறார்கள்
தனது படைத்தளபதி கால பைரவரை அழைத்து
நடந்தவற்றை கேட்டு பாதுகாப்பு அளிக்க சொல்கிறார்
அப்படியே ஆகட்டும் தாயே


கோள் கொள்ளையர்கள் மீண்டும் கொள்ளையடிக்க முற்படும்போது எழில்மதி வீரர்களுடன் சண்டையிடுகிறார்கள்
ஏய்,,,,,,,,,


ஆ.......
எழில்மதி வீரர்கள் கொள்ளையர்களை கொன்றுவிட்டு அவர்கள் கொள்ளையடித்து வந்த செல்வங்களையும் அவர்களின் உடைமைகளையும் கைப்பற்றுகிறார்கள்


அவர்கள் உடமைகளில் வாமனகிரியின் புதிய நாணயத்தை கண்டறிந்து  எழில்மதிக்கு எடுத்துச் செல்கிறார்கள்.
இங்கே பாருங்கள்
அதன்படி விளக்கம் கேட்டு வாமனகிரிக்கு மடல் அனுப்புகிறார்கள்
அரசே ! இது வாமனகிரி தேசத்து நாணயம்.
கோள் கொள்ளையர்களிடம் இருந்து கைப்பற்றினோம்.


என்ன இப்படி எழுதியிருக்கிறார்?
எழில்மதியின் செய்தி மடலை படித்த விக்ரமன் மிகுந்த கோபத்துடன் பதில் மடல் எழுதுகிறான்
போருக்கு உடன்பாடில்லை தேவை என்றால் அதை சந்திக்க தயார்
என பதில் மடல் எழுதுகிறான் விக்ரமன்.


இந்த நிலைமையை சரியாக கையாளுங்கள்
தற்போது நாட்டின் பொருளாதார நிலையும், தட்பவெப்ப சூழ்நிலையும் சரியில்லை என்பதால் முக்கிய முடிவை நீங்களே எடுங்கள் என அரசி சந்திரமதி தனது மகன்களிடம் கூறுகிறார்
வந்த பதில் மடல் பற்றி இளவரசர்கள் படைத்தளபதி காலபைரவனுடன் விவாதித்துக் கொண்டிருந்தனர்
83



அவர்கள் படை மிகவும் பெரியது என்ன செய்வது, என்று தெரியவில்லை
எழில்மதி போருக்கு மறைமுகமாக அழைப்பதை பற்றி சிவகாமியிடம் தெரிவித்தான் விக்ரமன்
வாமனகிரிக்கு போர் உதவி செய்ய தனது வீரர்களை அனுப்பலாமா? மன்னர் மாதேஸ்வரரிடம் கேட்டாள் சிவகாமி
வாமனகிரிக்கு உதவலாம் ஆனால் எழில்மதியை பகைத்துக்கொள்ள முடியாது.


தற்போது போருக்கான சூழ்நிலை இல்லை
தட்பவெப்ப நிலை மிகவும் மோசமாக உள்ளதை மகேந்திரன் மங்களதேவனிடம் விவரித்துக் கொண்டிருந்தார்.
இருப்பினும் மகேந்திரதேவன் சொல்வதை மங்களதேவன் கேட்காமல் போர் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தான்.


தனது படை வீரர்களை தந்து உதவ முடியவில்லை என மன்னிப்புக் கேட்டாள் சிவகாமி
இருப்பினும் நான் உதவுகிறேன் நாம் பார்த்துக்கொள்ளலாம்


அதன்படி போர் வியூகம் அமைத்தார்கள்
இந்தப் பக்கம் அவர்களை அழைத்து சென்றால் வென்றுவிடலாம்


படைகள் இருபுறமும் குவிக்கப்பட்டு போருக்கு தயாராக இருந்தார்கள்
அனைத்தும் தயார் என்றால் ஆரம்பியுங்கள்
அனைவரும் தயார்


அப்படித்தான்
நேரம் பார்த்து தாக்குங்கள்
போரின் மணி ஒலிக்க அம்புமழை ஆரம்பமானது
வாமன கிரியில் அம்பு தொகுப்புகள் நிறைந்த ஈட்டி படையை தயார் செய்தாள் சிவகாமி


எழில்மதி படைவீரர்கள் அடுத்து அம்பை எய்துவதற்குள் ஆகாயத்தில் அம்புகள் நிறைந்த ஈட்டிமழை பெய்ய தொடங்கியது
அதை சற்றும் எதிர்பாராத மங்களதேவா திகைத்துப் போனான்
ஐயோ,,,,,,,,


வேகமாக செல்
முற்கள் நிறைந்த உலோக பந்தினை எரியும் வாகனத்தை விக்ரமன் ஓட்டிச்சென்று எதிரி படை வீரர்களை துவம்சம் செய்தான்
ஐயோ,,,,,,,
அம்மா
சூரியன் மறையும் போது இருபுறமும் பாதி படைகளுக்கு மேல் இழந்திருந்தார்கள்
மணி ஒலிக்கப்பட்டு போர் நிறுத்தப்பட்டது


மறுநாள் அந்த அபாய வாகனத்தின் மூலம் மீண்டும் எழில்மதி வீரர்களை தாக்க முற்பட்டபோது காலபைரவன் ஈட்டியின் மூலமாக அந்த வாகனத்தை சாய்த்தான்.
விக்ரமனை கொல்ல முற்படும் போது சிவகாமி காலபைரவனுடன் நேருக்கு நேர் சண்டையிட்டாள்.
91


போர்மணி ஒலிக்கப்பட்டு சண்டை நிறுத்தப்பட்டது. அதன்பிறகு தூரத்தில் இருந்து வந்த ஒரு அம்பினால் வாமனகிரி படைத்தளபதி கொல்லப்படுகிறான்
ஆ........


இரண்டாம் நாள் இறுதியில் அதிகமான படை வீரர்கள் இழக்கப்படுகிறார்கள்


இதை வாங்கிக் கொள்ளுங்கள்
இளவரசர் மகேந்திரர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொருளுதவி செய்து கொண்டிருந்தார்
போரைப் பற்றி அறிந்து எழுந்த மன்னர் விஜயேந்திரர் அரசியிடம் கோபப்பட்டார்
இருவரையும் உடனே அழைத்து வந்து அமைச்சரவையை கூட்டு


உடனே வாகனத்தை தயார் செய்யுங்கள்
மறுபுறம் மரக்காணப்பட்டினத்தில் போர் பற்றி அறிந்த வரகுண வர்மரும் எழில்மதிக்கு செல்ல முடிவெடுத்தார்


அவனை மன்னித்து விடுங்கள் தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள்
போரை பற்றியும் தனது மகன்களை பற்றியும் இருநாட்டு மன்னர்களும் பேசி வருத்தப்பட்டார்கள்


நீங்கள் இருவரும் நம் நாட்டு மக்களை பற்றியும் சூழ்நிலைகளை பற்றியும் அறிந்து முடிவு எடுக்க வேண்டும். அதுவே ஒரு மன்னனுக்கு தேவை
நீ பெரும் தவறு செய்துவிட்டாய்
நான் தவறு செய்தேனா? நமது தேசத்தை மதிக்காதவர்களை மதிக்க சொன்னது தவறா?


நான் இவனை அழைத்தேன் இவனும் உதவவில்லை
நம் மக்களுக்கு உதவி தேவைப்பட்டது. மதிப்பைவிட உதவியே முக்கியம்


நான் இளைய இளவரசன்
மகேந்திரனை மன்னராக
அறிவிக்கிறேன் பதவியேற்பு
விழாவிற்கு ஏற்பாடு செய்யுங்கள்
இதனால் கடும் கோபமடைந்த மங்களன் தனக்கு அநீதி இழைக்கப்பட்டதாக
எண்ணி விலகி சென்றான்


என்ன காரியம் செய்தாய் என்று தெரியுமா? நமது படைவீரர்களையும் இழந்தாய் மக்களின் மதிப்பையும் இழந்தாய்
வாமனகிரி சென்ற மன்னர் விக்ரமனின் மீது கடும் கோபம் கொண்டார்
என்ன நடந்தது? நமது படை தளபதி எப்படி இறந்தார்?
மூத்த படை வீரரை அழைத்து நடந்தவற்றை கேட்டறிந்தார்


அவர் இல்லை என்றால் இன்னும் அதிகமாக சேதம் ஆயிருக்கும்
இளவரசரே கூட இறந்திருப்பார்
அப்போது படைவீரர், சிவகாமியையும் அவர் செய்த உதவியையும் பற்றி விவரித்தார்.


எதற்கு அவள் இவனுக்காக இவ்வளவு துணிந்து செயல்பட வேண்டும்?


எழில்மதியிடமிருந்து ஓலை வந்துள்ளது
எழில்மதி முடிசூட்டு விழாவிற்காக மற்ற நாட்டு மன்னர்களையும் மாமன்னர் விஜயேந்திரர் அழைக்கிறார்
இளவரசர் மகேந்திரன் மன்னராக பதவி ஏற்பு விழா கோலாகலமாக தொடங்கியது
100


வணக்கம் நன்றாக உள்ளீர்களா?
அப்போது வந்த சிவகாமியும், லட்சுமியையும் சந்திரமதி பார்க்கிறாள்
மாமன்னர் மகேந்திரர் வாழ்க வாழ்க
மகேந்திரன் மன்னராக பதவியேற்றுக்கொண்டார்


வாருங்கள் வாருங்கள்
விக்ரமன் சிவகாமி விடயத்தை அறிந்த மன்னர் வரகுணர் தனது மனைவி மக்களுடன் இந்திர தேசத்திற்கு சிவகாமியை பெண் கேட்டு சென்றார்
எனது மகன் விக்ரமன் உங்கள் மூத்த மகள் சிவகாமியை மணக்க விரும்புகிறான் உங்கள் மகளும்....
சிவகாமியின் மகிழ்ச்சியை பார்த்த மன்னர் மாதேஸ்வரர் தனக்கு விருப்பமில்லை என்றாலும் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டார். அதன்படி பரிசம் பேசி தட்டு மாற்றப்பட்டது
102


போர் நிறுத்தத்திற்கு பிறகு சண்டை இடும் வழக்கம்
போர்க்குணம் கொண்ட யாருக்கும் இருக்காது எனவே ......
வரகுண மன்னர் படைத்தளபதி இறந்ததைப் பற்றி கேட்டுக் கொண்டிருந்தார்
அவர்கள் விவாதிப்பதை விகந்தன் தூரத்திலிருந்து நோட்டமிட்டான்.


வாமனகிரியும் இந்திரயுதாவும் திருமண கோலம் பூண்டது
வரும் பௌர்ணமி அன்று நல்ல நாள்
இரு நாட்டு மன்னர்களும் திருமணத்தை பற்றி கேட்டறிந்தனர்


அதன்படி இளவரசி சிவகாமியும் விக்ரமன் வீட்டார்கள் கோயிலுக்கு பூஜை செய்ய சென்றார்கள்.
விக்ரமன் அரண்மனையில் திருமண வேலைகளை பார்த்துக் கொண்டிருந்தான்
அவர்களை செந்நீதி மாறன் மறைந்திருந்து வேவு பார்த்தான்


தனது ஆயுதமேந்திய வீரர்களுடன் தாக்க தயாராக இருந்தான்




என்னவென்று யூகிப்பதற்குள் ஆகாயத்திலிருந்து அம்புகள் பாய்ந்து
. என்ன அது .....
தந்தையே ....
விஷ்ணு......
தனது தந்தையை காப்பாற்ற விஷ்ணுவர்தன் தன்னுயிரை தியாகம் செய்தான்


தந்தையை காப்பாற்று
ஐயகோ மகனே...
சிவகாமி கொள்ளையர்களை தாக்கத் தொடங்கினாள்



செந்நீதிமாறன் கையில் வாளுடன் வரகுணரை துரத்தி சென்றான்
ஓடாதே நில் .....
ஐயோ . . .
அவரை முதுகில் குத்தினான்
அதைப்பார்த்த மாதேஸ்வரர் மற்றவர்களை குதிரை வண்டியில் ஏற்றி அரண்மனைக்கு அனுப்பினார்


சிவகாமி செந்நீதிமாறனுடன் சண்டையிட்டு காயமடைந்து கீழே விழுந்தாள்
அப்போது செந்நீதி மாறன் குதிரையில் தப்பிச் செல்ல சிவகாமி அவனைப் பின் தொடர்ந்து சென்றாள்.
திரும்பி வந்து பார்க்கும் போது விகந்தன் வரகுணரின் பிணத்தைப் பார்த்து அழுது கொண்டிருந்தான்.



நீங்கள் இவ்வளவு நேரம் எங்கே சென்றிருந்தீர்கள்?
இருவரும் பேசிக்கொண்டு இருக்கையில் செந்நீதிமாறன் பின்னால் இருந்து அம்பை எய்கிறான்
ஆ.........
அம்பு விகந்தனின் நெஞ்சில் பாய, அங்கேயே இறக்கிறான்
மற்றொரு அம்பு சிவகாமியின் தோளில் பாய,
சிவகாமி கீழே சாய்கிறார். செந்நீதிமாறன் புறப்பட்டான்


செந்நீதிமாறன் வரும் வழியில் விக்ரமன் நின்றுகொண்டிருந்தான்
நீங்கள் கூறிய அனைத்து வேலைகளையும் முடித்து விட்டேன்
இல்லை நீ முடிக்க வேண்டிய வேலை இன்னும் ஒன்று உள்ளது, என்று கூறி கையிலிருந்த மணி மாலையை எடுத்து கொடுத்தான்
இதை எங்கேயோ பார்த்தது போல் இருக்கிறதே
இதை நினைவிருக்கிறதா ?
112


உன் தந்தை கார்முகிலன் இறந்த இரவு
நான் அவருடன் தான் இருந்தேன்
அவரே அதுவரை அறிந்திடாத இரகசியத்தை அறிந்து, அதை உன்னிடம் கூற விரைந்த போது என்
காவலர்கள் தாக்க உயிரிழக்கும் தருவாயில், என்னிடம் அந்த இரகசியத்தை கூறினார்.
"அது நீயும் ஒரு இளவரசனே!.."
நாடோடி கூட்டத்தில் இருந்த ஒருத்திக்கும் எனது தந்தைக்கும் பிறந்தவன் நீ.
அதை அறிந்த எனது தாத்தா உங்கள் கூட்டத்தை அழித்தார். ஆனால் நீ
எப்படியோ தப்பித்து இன்று என் முன்னால்..


தன் தந்தை வைத்திருந்த மணி எப்படி இவர் கையில் வந்தது என செந்நீதிமாறன் எண்ணிக்கொண்டிருந்தான்
இது உனது தந்தைக்கு சொந்தமானது அல்ல. இது எனது குடும்ப மணி, இளவரசர் பிறந்தபோது அணிவிக்கின்ற மணி நீ, பிறந்ததும் உனக்கு அணிவித்த மணி
நம் தந்தையை கொன்றதற்கு மிக்க நன்றி
செந்நீதிமாறன் அதை பற்றி சிந்தித்து கொண்டிருக்கும்போது தனது கையில் இருந்த கத்தியால் மார்பில் குத்தினான் விக்ரமன்
அப்படி என்றால் நீ எனது சகோதரனா?


அந்த ஒரு காரணத்திற்காகத் தான் உன்னை வைத்தே நான் அனைவரையும் கொன்றேன். நான் மட்டுமே இந்த தேசத்தை ஆளப் பிறந்தவன்.
செந்நீதிமாறன் விழும்போது இதை அனைத்தையும் கேட்டுக் கொண்டு அவன் பின்னால் நின்றிருந்தாள் சிவகாமி
தான் உயிருக்குயிராய் நேசித்தவன் இத்தனைக் கொடியவனா என்று உறைந்து போய் நின்றிருந்தாள்.


ஆம் நான்தான் இதையெல்லாம் செய்தேன்
இதையெல்லாம் உனக்கு தெரியக்கூடாது என்று நினைத்தேன். உனக்கு எதுவும் ஆகாமல் பார்த்துக் கொண்டேன் ... இனிமேல் நம் இரு தேசத்திற்கும் நான் தான் பேரரசன், நீதான் பேரரசி. இது நமக்குள்ளே இருக்கட்டும் ...
உன்னை மிகவும் நேசித்தேன் ஆனால் நீ ....
என்று கூறியபடி தனது கையிலிருந்த கத்தியால் விக்ரமனின் இதயத்தில் குத்தினாள் சிவகாமி


உனக்கு தெரிந்தால் இதுதான் நடக்கும் என்று எதிர்பார்த்தேன், என்னை மன்னித்துவிடு, வேறு திருமணம் செய்துகொள், எனது தாய்மார்களுக்கு தெரிய வேண்டாம்.
என்று கூறியபடி அவன் அளித்த தங்கமணி மாலையை அவனே அறுத்து, கீழே விழுந்து இறந்தான்


கொள்ளையர்களால் விக்ரமன் உட்பட அனைவரும் கொல்லப்பட்டார்கள்
அவரின் சகோதரி வித்யபாலாவும் அவளது கணவரும் வாமனகிரி தேசத்தை வழிநடத்த விக்ரமன் விருப்பப்பட்டார்
சிவகாமியின் முகத்தைப் பார்த்து ஏதோ ஒன்று நடந்துள்ளது என்று அவரின் தந்தை புரிந்து கொள்கிறார்.
118


எவ்வளவு காலம்தான் நீ இப்படியே இருக்க போகிறாய் நீ இன்னொரு திருமணம் செய்து கொள்
நீ இப்படியே இருந்தால் நானும் நமது தேசமும் என்ன செய்வோம் விரைவாக மனதை மாற்றிக்கொள் என்று மன்னர் மாதேஸ்வரர் மனவருத்தத்துடன் கூறி சென்றார்
உன் சகோதரி லட்சுமி தேவி திருமணமும் தடைப்படுகிறது. அவளும் எழில்மதி மன்னர் மகேந்திரனும் ஒருவரை ஒருவர் நேசிக்கிறார்கள். என்ன செய்வதென்று தெரியவில்லை


மன்னர் மாதேஸ்வரர் எழில்மதி அரசி சந்திரமதியை பார்க்க சென்றார்
உங்கள் மகள் லட்சுமிதேவியை மகன் மகேந்திரனுக்கு திருமணம் செய்ய சம்மதம் ஆனால்?
என்ன? ஆனால் ......
எதுவாக இருந்தாலும் சொல்லுங்கள் என்று கூற அரசி கூறியதை கேட்டு மன்னர் திகைத்து போனார்.
120


அதற்கு நீங்கள் என்ன கூறினீர்கள்
பேரரசி சந்திரமதி கூறிய நிபந்தனை என்னவென்றால் இளைய இளவரசி லட்சுமி தேவியை மணம் செய்ய மூத்த இலவரசி சிவகாமியை மங்களதேவனுக்கு திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்பதே
நான் கூற என்ன இருக்கிறது உன் சம்மதம் தான் என் சம்மதம்
இளவரசி தனது தங்கையின் வாழ்வுக்காகவும், தந்தையின் ஆசைக்காகவும் பிடிக்கவில்லை என்றாலும் திருமணத்தை ஒத்துக் கொள்கிறார்


அதன்படி இருவருக்கும் ஒரே மேடையில் திருமணம் நடைபெறுகிறது
122


இரு ஜோடிகளுக்கும் சாந்தி முகூர்த்தம் நடைபெறும் வேளையில்
எனது தாயின் நிபந்தனைக்காக ,என்னை மன்னித்துவிடு உன் தந்தையும் இதையேதான் விரும்பினார்.
எனது தாய் சொன்ன ஒரே காரணத்திற்காக தான். மற்றபடி பிடிக்காத பெண்ணை நான் என்றும் தொட்டதில்லை.
என்று கூறிவிட்டு அந்தப்புரம் புறப்பட்டு சென்றான் மங்களதேவா
123


லட்சுமிதேவி கர்ப்பம் தரித்ததை அனைவரும் அறிந்து மகேந்திரனுக்கு வாழ்த்து கூறினார்கள். எனினும் லட்சுமிதேவி உடல்நிலை மோசமாக இருந்தது
124


சில நாட்களுக்கு பிறகு லட்சுமிதேவி கர்ப்பம் கலைந்ததை எண்ணி கலங்குகிறாள்
கலங்காதே நாம் யாருக்கும் எந்த தவறும் செய்யவில்லை
நமக்கு விரைவில் நல்லது நடக்கும்
இதைக்கேட்ட அரசி சந்திரமதியும் சிவகாமியும் வருத்தம் கொண்டார்கள்
நான் உனக்கு இழைத்த அநீதியே தான் இப்படி ஆகிவிட்டதோ?
என்னை மன்னித்துவிடு சிவகாமி. நீ இருந்தால் நாடும் வீடும்
நன்றாக இருக்கும் என்று சுயநலமாக எண்ணிவிட்டேன்.
125


அனைவரும் தன்னை எண்ணி வருத்தப்பட்டதை உணர்ந்து,சில நாட்களில்
பழைய கெட்ட நினைவுகள் எல்லாம் மறந்து குடும்பத்துடன் ஒன்றிணைகிறாள் சிவகாமி
சிவகாமி கர்ப்பம் தரித்திருப்பதை மருத்துவர் மூலமாக அறிகிறாள் அரசி சந்திரமதி
கரு நன்றாக உள்ளது. விரைவில் மகிழ்ச்சி பொங்கும்
126


அதன்படி மகிழ்ச்சியடைந்த சந்திரமதி இனிமே அரசியாக, ராஜமாதாவாக பொறுப்பேற்க அனைத்து தகுதிகளும் உனக்கு வந்திருக்கிறது


என்று கூறி தனது கையிலிருந்த குடும்ப வளைவியை சிவகாமிக்கு அணிவித்தார்


ராஜ மாதாவாக பதவி வகிக்க நான் தகுதியானவளா??
என்று கூற மக்கள் அனைவரும் ஆம்! ஆம்! என்று ஆர்ப்பரித்தார்கள்


ராஜமாதா சிவகாமி தேவி வாழ்க!
வாழ்க! வாழ்க! என்று பொதுமக்கள் ஆரவாரமாக ஆர்ப்பரித்தார்கள்
129


இனி ராஜா மாதாவாக சிவகாமி பயணம் தொடரும் ...

சிவகாமி இஃது ஒரு வரலாற்றுப் புனைவு கதை. வீரம் நிறைந்த அரசர்கள் அரசாங்கங்களும் ஆண்ட மண்ணின் கதை. பல குறுநில மன்னர்கள் மற்றும் பேரரசுகள் காலம் காலமாக ஆண்டு வந்த மண்ணில் அந்த அரசுகளுக்கிடையிலான பகை, துரோகம், கைமாறு, வர்த்தகம், போர் மற்றும் உறவின் நிலைக் குறித்த ஒரு கற்பனைக் கதையே இந்த சிவகாமி.

நம் அனைவரையும் கவர்ந்த ஒரு கதாபாத்திரத்தின் தாக்கத்தால் வெளிவந்துள்ளது இந்த ஒளிப்படக் கதை. சிவகாமி என்ற முதன்மை கதாபாத்திரம் ஒரு பெண்ணாகவும் ஓர் அரசியாகவும் தன் ராஜ்ஜியத்தையும் மக்களையும் காக்கப் போராடுவதை அழகிய ஓவியங்களுடன் சித்திரக்கதை வடிவில் நேர்த்தியாகப் படைக்கப்பட்டுள்ளது. டிஜிட்டல் வடிவில் வரையப்பட்ட இந்த ஓவியங்கள் கதையோடு ஒன்ற வைத்து அந்த உலகிற்கே கூட்டிச் செல்லும் என்பது திண்ணம்.

பா. சாந்தகுமார்

